**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.6/19**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.பழனி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பழனி |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.லோகநாதன் |
| கிராமம் | - செய்யாறு |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

28.11.2023
**பி.வா.சா.1.**

என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையெழுத்திட்டேன். 25.09.1971 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். **( 25.09.1971 தேதியிட்ட முனுசாமி என்பவருக்கு சின்னகுட்டி கவுண்டர் மற்றும் பலர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 25.10.1996 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்துள்ளேன். **( 25.10.1996 தேதியிட்ட ஜெயரானம் மற்றும் ஒருவருக்கு சுகுணா மற்றும் பலர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** 07.02.1997 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல்

செய்துள்ளேன். ( **07.02.1997 தேதியிட்ட மகாராஜன் என்பவருக்கு ஜெயராமன் மற்றும் ஒருவர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 14.05.2014 தேதியிட்ட உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சான்றாவணத்தை பிரதிவாதி தரப்பினர் இல்லையென்றும் உயில் குறித்து பிரதிவாதி தரப்பில் நிரூபனம் செய்யப்படவேண்டும் என்றும், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதில் ஆட்சேபனை உள்ளதாக கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார். மேற்படி உயில் ஆவணம் முன் கிரையதாரர் எவ்வாறு சொத்தில் உரிமை ஏற்பட்டது என்பது குறித்து தெரிவிக்கும் பொறுட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் நிரூபிக்கப்பட்டதா என்பது குறித்து தற்போது தீர்வு காண இயலாது. மேலும் வாதி தரப்பில் மேற்படி ஆவணம் குறித்து குறுக்கு விசாரணை செய்துக்கொள்ள வழி வகையுள்ளதால் மேற்படி ஆவணம் வாதி தரப்பு ஆட்சபேனையோடு குறியீடு செய்யப்பட்டுள்ளது. (**14.05.2014 தேதியிட்ட கமலா என்பவர் எழுதி வைத்துள்ள உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.அ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) தாவா சொத்திற்கு நான் செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீதுகள் மற்றும் குடிநீர் வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். (**10.01.2014 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (**09.11.2014 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (**08.12.2015 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள வீட்டுவரி ரசீது பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (**10.01.2017 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள வீட்டுவரி ரசீது பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது** )

**(10.01.2014 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள குடிநீர் வரி ரசீது பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (09.11.2014 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள குடிநீர் வரி ரசீது பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (08.12.2015 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள குடிநீர் வரி ரசீது பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (10.01.2017 தேதியிட்ட பிரதிவாதி செலுத்தியுள்ள குடிநீர் வரி ரசீது பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்தை நான் கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் **(14.08.2006 தேதியிட்ட பிரதிவாதி மகாராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற அசல் பி.வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்கொண்டு ஆவணம் குறியீடு செய்யவேண்டி கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.